**புதுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : திருமதி.S.N.சியாமளா.,**

**உத்தரவு**

**ந.க.எண். 915/2024/எப்1** **நாள் :18.04.2024**

| | |
|---|---|
| **பொருள்..** | மனைப்பிரிவு – புதுக்கோட்டை நகராட்சி – புதுக்கோட்டை தெற்கு கிராமம் சர்வே எண். 159/22, 0.50 ஏக்கர் (2050.ச.மீ) பரப்பளவு இடத்திற்கு 15 மனைகள் கொண்ட மனைப்பிரிவு அங்கீகரித்து உத்தரவிடுதல் – தொடர்பாக. |
| **பார்வை ..** | 1. உறுப்பினர் செயலர் புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் /நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் புதுக்கோட்டை அவர்களின் கடித ந.க.எண்.1582/2023/புமா., நாள்:02/02/2024.<br>2. நகர்மன்ற தீர்மானம் எண். 597, நாள்:05.03.2024.<br>3. மனுதாரர் திரு. சின்னையா, அவர்களது விண்ணப்பம் 05.02.2024. |

******

**உத்தரவு :**

பார்வை 1ல் கண்டுள்ள செயல்முறை உத்தரவில் புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட புதுக்கோட்டை தெற்கு கிராமம் சர்வே எண்.159/22 ,இடத்தில் 0.50 ஏக்கர் (2050.ச.மீ) பரப்பளவு இடத்திற்கு உறுப்பினர் செயலர் / துணை இயக்குநர் புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம், புதுக்கோட்டை அவர்களால் மனைப்பிரிவு வரைபடத்திற்கு LP/DTCP(PD) NO.4/2024 என தொழில் நுட்ப அனுமதியும், திட்ட அனுமதி எண்.2/2024 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அடங்கிய சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சிக்கு மனுதாரரால் தானமாக தானப்பத்திரம் எண் 571/2024 நாள்29.01.2024 ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சிக்கு மனைப்பிரிவு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநரது இணைய வழி சேவை வழியாக (S.R.No.109/CP/23-24/0026474) விண்ணப்பித்து நகராட்சிக்கு செலுத்தவேண்டிய உரிய கட்டணங்கள் ரூ.25,700/–மனைப்பிரிவு சாலை பராமரிப்பு, வைப்புத் தொகை கட்டணம் ரூ.1,00,000/. மற்றும் அரசுக்கு செலுத்தவேண்டிய நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.3,31,200/– மற்றும் கூராய்வு கட்டணம் ரூ. 15,000/- செலுத்தியுள்ளார்கள்.

பார்வை 1ல் கண்ட உறுப்பினர் செயலர் / துணை இயக்குநர் நகர் ஊரமைப்புத் துறை புதுக்கோட்டை அவர்களின் உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஆணையாளர்
புதுக்கோட்டை நகராட்சி

18/4/2024

**இணைப்பு** : மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

**பெறுநர்** : திரு. A. சின்னையா
எண் 16/81, காட்டுநாயக்கன் நகர்
தொண்டைமான் நகர்
தெற்கு சந்தைபேட்டை
புதுக்கோட்டை.

நகல் : நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை,
நகல் : இணை சார்பதிவாளர், புதுக்கோட்டை.
நகல் : நகராட்சி பொறியாளர், புதுக்கோட்டை நகராட்சி
நகல் : வருவாய் அலுவலர், புதுக்கோட்டை நகராட்சி
நகல் : துப்புரவு அலுவலர், புதுக்கோட்டை நகராட்சி